வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 27.06.2026 சனிக்கிழமை | இதழ் : 172 | பக்கங்கள் : 08

# ஆட்சியாளர்களைக் கேள்வி கேட்கும் சுதந்திரம் நாட்டு மக்களுக்கு உண்டு!

### அமைதி காக்கும் பணிக்காக ஹெய்ட்டிக்கு செல்லும் படையினர் மத்தியில் ஜனாதிபதி


யாழ்ப்பாணம், ஜூன் 27

நாட்டின் எந்தவொரு பிரஜையும் ஆட்சியாளருக்கு பயந்து வாழ வேண்டிய அவசியமில்லை என்றும், ஆட்சியாளர்களை கேள்வி கேட்கும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் பணிகளுக்காக ஹெய்ட்டிக்கு செல்லவுள்ள இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் நிகழ்வு நேற்று பனாகொடையில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து ஒரே

07



## உபதவிசாளர் பதவி நீக்கத்துக்கு எதிராக சாவகச்சேரியில் நேற்றுக் கடையடைப்பு



யாழ்ப்பாணம், ஜூன். 27

சாவகச்சேரி நகர சபை உப தவிசாளரின் பதவி நீக்கப்பட்டு உறுப்பினர் பதவி வறிதாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கவனயீர்ப்பு போராட்டமும், கடையடைப்பும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை சபையில் விமர்சித்து, அதனை தூக்கி வீசிய குற்றத்தில், நகர சபை உப தவிசாளர் ஞானப்பிரகாசம் கிஷோரை பதவியை நீக்கியும், நகர சபை உறுப்புரிமையை வறிதாக்கியும் வர்த்தமானி அறிவித்தலை வடக்கு மாகாண ஆளுநர் வெளியிட்டிருந்தார்.

07

## நெடுந்தீவு பாடசாலைகளுக்கு சென்ற ஜோசப் ஸ்டாலின் அடங்கிய குழுவினர்

### அதிபர், ஆசிரியர்களின் பிரச்னை குறித்து ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜூன். 27

நெடுந்தீவு பாடசாலைகளுக்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொது செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் கள விஜயத்தை

07

## இலங்கைக்கு 57.4 மில்லியன் டொலர் வழங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி!

கொழும்பு, ஜூன். 27

வீடுகளின் கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்னுற்பத்தி தொகுதி மற்றும் மெய்நிகர் தேறிய அளவீடு மூலம் குறைந்த விலையில் தூய்மையான எரிசக்தியைப் பெறுவதற்கான சாத்தியப்பாட்டை விரிவுபடுத்தவும், பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைக்கவும் உதவும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கி 57.4 மில்லியன் டொலர் நிதியுதவியை இலங்கைக்கு வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது.

இந்த நிதியுதவி 35 மில்லியன் டொலர் சலுகைக் கடன், ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து பெறப்பட்ட 16.9 மில்லியன் டொலர் மானியம், கூட்டுக் கடன் வழங்கல் பொறிமுறைக்காக ஜப்பான் நிதியத்தினால் வழங்கப்பட்ட 5.5 மில்லியன் டொலர் மானியம் மற்றும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்

07

## நாமலை சாடிய மகிந்த ஜயசிங்க!

கொழும்பு, ஜூன். 27

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள "கோட் பாதர்" களின் தற்போதைய தலைமுறை நாமல் ராஜபக்ஷ என்று பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தனது உரையின் போது சபையில் இல்லாதிருந்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டொன்றை முன்வைத்த பிரதி அமைச்சர், போதைப்பொருள் கடத்தல் கோட் பாதர்களின் தற்போதைய இணைப்பு அன்றைய தினம் சபையில் இருந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும் எனக் குறிப்பிட்டார்.

07

## மூடப்படும் அபாயத்தில் சூரியசக்தி நிறுவனங்கள்!

### அரசின் போக்கை சாடினார் தயாசிறி

கொழும்பு, ஜூன். 27

மூடப்படும் அபாயத்தில் சூரிய சக்தி நிறுவனங்கள் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூலக்கேள்வி நேரத்திலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் அரசாங்கம் மந்தமான

07

## தங்களுக்கு நெருக்கமானவர்களின் தவறுகளை மூடிமறைக்கிறது அரசு!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 27

பாராளுமன்றத்தில் ஒழுக்கம் மற்றும் நாகரிகம் குறித்துப் பேசும் ஆளுந்தரப்பினர், தங்களுக்கு நெருக்கமானவர்களின் தவறுகளை மூடிமறைப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா குற்றம் சாட்டியுள்ளார்.

07

## போதைப்பொருள் வலையமைப்பு இலங்கையில் முற்றாக முடக்கம்!

### பிரதி அமைச்சர் சுனில் வடகல

கொழும்பு, ஜூன். 27

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் பாதாள உலகக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதற்காக, கடந்த கால அரசியல் பின்னணிகளைத் தற்போதைய அரசாங்கம் முற்றிலும் ஓரங்கட்டியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

07

## நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும்!

### சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன். 27

அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் ஊடக அறிக்கைகள் அல்லது விமர்சனங்கள் ஊடாக, நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையிலும், ஜனநாயகத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்குப் பாதகம் விளைவிக்கும் வகையிலும் கருத்துக்கள் வெளியிடப்படுவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

நீதித்துறையின் சுதந்திரம் மற்றும்

07

## போதைப்பொருள் ஒழிப்பு எமது அரசின் நாடகமல்ல!

### அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, ஜூன். 27

முந்தைய அரசாங்கங்களைப் போல தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் வெறும் நாடகமல்ல என பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தேசிய போதைப்பொருள் எதிர்ப்பு பேரணியில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உலகளாவிய பேரழிவாக உருவெடுத்துள்ள

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இலவச ஐ.வி.எவ். சேவை; தேவையான வசதிகள் குறித்து ஆராய்வு!

## வரலாற்றுச் சாதனை என ஆளுநர் பாராட்டு



யாழ்ப்பாணம், ஜூன். 27

இலங்கை அரச மருத்துவத் துறை வரலாற்றில் முதன்முறையாக கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்கை முறை கருக்கட்டல் (ஐ.வி.எவ்.) சேவையின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்காலத் தேவைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நேற்று முன் தினம் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், அரச மருத்துவமனையில் இலவசமாக ஐ.வி.எவ். சேவையை ஆரம்பித்தமை ஒரு வரலாற்றுச் சாதனை எனக் குறிப்பிட்டு, பேராசிரியர் எஸ். ரகுராமன் தலைமையிலான மருத்துவக் குழுவினருக்கும் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனை நிர்வாகத்துக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

பல இலட்சம் ரூபாய் செலவில் தனியார் மருத்துவமனைகள் அல்லது வெளிநாடுகளில் மேற்கொள்ளவேண்டியிருந்த இச்சிகிச்சை, தற்போது பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களுக்கும் கிடைக்கும் வாய்ப்பாக மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மருத்துவமனையின் பெண்கள் பராமரிப்புக்கான சிறப்பு மையத்தில் பேராசிரியர் ரகுராமனின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சேவையை இடையூறுகள் இன்றி தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, ஐ.வி.எவ். திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலத் தேவைகள் குறித்து பேராசிரியர் ரகுராமன் விளக்கமளித்தார். மாதமொன்றுக்கு 10 முதல் 15 ஐ.வி.எவ். சிகிச்சைச் சுழற்சிகளை மேற்கொள்ளும் இலக்குடன் செயற்படுவதற்கு மேலதிக மனிதவளம், உபகரணங்கள் மற்றும் நிதி வசதிகள் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது இரண்டு தாதிய உத்தியோகத்தர்கள், ஒரு இணைப்பாளர் மற்றும் ஒரு கருத்தரிப்பு உதவியாளர் சேவையில் ஈடுபட்டுள்ள நிலையில், சேவையை விரிவுபடுத்துவதற்காக மேலதிக மருத்துவ அதிகாரி, தாதிய உத்தியோகத்தர் மற்றும் சுகாதார உதவியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்டது.

ஒரு நோயாளிக்கான ஆய்வுகூட மற்றும் மருத்துவப் பொருள்களின் செலவு சுமார் 1.3 இலட்சம் ரூபாவாகவும், தூண்டுதல் மருந்துகளுக்கான செலவு சுமார் 1.2 இலட்சம் ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி ஒரு நோயாளிக்கான மொத்த செலவு சுமார் 2.5 இலட்சம் ரூபாவாகும். மாதமொன்றுக்கு 15 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க சுமார் 40 இலட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு மருத்துவ உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாகப் பயணிக்க வேண்டியுள்ளதால், அவர்களுக்கான பாதுகாப்பான போக்குவரத்து வசதிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சுகாதார அமைச்சின் செயலாளர் உறுதியளித்தார்.

சிகிச்சையை தடையின்றி முன்னெடுக்க தேவையான ஆய்வுகூட உபகரணங்களை விரைவாக பெற்றுக்கொள்வது, நிதி ஒதுக்கீடுகள், கொள்வனவு நடைமுறைகள் மற்றும் நன்கொடைகளை வெளிப்படைத் தன்மையுடன் நிர்வகிப்பது உள்ளிட்ட விடயங்களும் ஆராயப்பட்டன.

வடக்கு மாகாண மக்களுக்கு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மருத்துவ சேவையை தொடர்ச்சியாக வழங்க தேவையான அனைத்து நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையும் விரைவாக ஏற்படுத்துமாறு ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் அதிகாரிகள், மருத்துவமனைப் பணிப்பாளர், குடும்ப நல மருத்துவப் பேராசிரியர் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஒக்ரோபரில் 2,847 பேர் தாதியர் சேவைக்கு!

கொழும்பு, ஜூன். 27

இலங்கையின் தாதியர் பணியாளர்களை வலுப்படுத்தும் நீண்டகால உத்தியின் ஒரு பகுதியாக, இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் 2,847 தாதியர்களைப் புதிய நியமனங்கள் ஊடாகச் சேவையில் இணைத்துக் கொள்ள சுகாதார மற்றும் ஊடக அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாதியர் கல்லூரியில் நடைபெற்ற, 2021ஆம் ஆண்டு தொகுதியைச் சேர்ந்த தாதியர் மாணவர்களுக்கான பட்டமளிப்பு மற்றும் உறுதிமொழி ஏற்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்த விசேட அறிவிப்பை வெளியிட்டார்.

அமைச்சரின் விவரங்களின்படி, 2030ஆம் ஆண்டுக்குள் ஒட்டுமொத்தமாக 13,600 புதிய தாதியர்களைத் தேசிய சுகாதாரச் சேவையில் நியமிப்பதே அரசாங்கத்தின் இறுதி இலக்காகும் என்பதுடன், இந்த ஆண்டு இறுதிக்குள் அந்த இலக்கின் 50 சதவீதத்தை அடைய எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சாவகச்சேரி உப தவிசாளர் நீக்கம் ஜனநாயக விரோதம்

## கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 27

சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை ஜனநாயக விரோதமான செயற்பாடு என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற போதைப்பொருள் அச்சுறுத்தல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போதைப்பொருள் பிரச்னை தீவிரமாக காணப்படுவதாகவும், இதனை கட்டுப்படுத்த அரசாங்கத்தின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் நடைமுறையில் முழுமையாக செயற்படவில்லை எனத் தெரிவித்த அவர், ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவதால் மத்திய அரசின் செல்வாக்குக்கு உட்பட்டு செயற்பட வேண்டிய நிலை இருப்பதாகவும் விமர்சித்தார்.

வடக்கு ஆளுநர் சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளரை பதவியில் இருந்து நீக்கியமை, அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக அமைந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

மேலும், வடக்கு மற்றும் கிழக்கில் நிலவும் இராணுவப் பிரசன்னம் மற்றும் போதைப் பொருள் பரவல் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார். (அ)

# நெடுந்தீவு வெள்ளைக் கடற்கரையில் சிக்கிய சட்டவிரோதமான பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூன். 27

நெடுந்தீவு வெள்ளைக் கடற்கரைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட கடலோரப் பாதுகாப்பு நடவடிக்கையின் போது, சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்த முயன்றதாகச் சந்தேகிக்கப்படும் வெளிநாட்டுச் சிகரெட்டுகள், கிருமிநாசினிகள் மற்றும் வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட பெருமளவிலான பொருள்களை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

வட கடற்படை கட்டளைத் தளத்திற்கு உட்பட்ட கடற்படையினரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்துப் பணியின்போதே இப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

வெள்ளைக் கடற்கரைப் பகுதியில் கடற்படையினர் சோதனையிட்ட போது, அங்கே கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட 6 சந்தேகத்திற்கிடமான சாக்கு மூடைகளைக் கைப்பற்றி தீவிரமாகப் பரிசோதித்துள்ளனர்.

இதன்போது, அந்த மூட்டைகளில் இருந்து 500 பைக்கெற் வெளிநாட்டுச் சிகரெட்டுகள், 2,295 பைக்கெற் கிருமிநாசினிகள், 2,569 மருத்துவ களிம்புகள், 165 அழகுசாதன கிரீம்கள் மற்றும் 64 வாசனைத் திரவிய போத்தல்கள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கடத்தல் பொருள்கள் அனைத்தும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகவும் மேலதிக விசாரணைகளுக்காகவும் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

# இயன்முறை சிகிச்சை நிபுணர் மரணம் பொலிஸ் உயரதிகாரி ஒருவரும் கைது!

கொழும்பு, ஜூன். 27

தெல்தெனிய பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த பெண் இயன்முறை சிகிச்சை நிபுணரின் மரணம் தொடர்பில் குண்டசாலை பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபருக்கும், அவரது மனைவிக்கும் தலைமறைவாக இருப்பதற்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றச் சாட்டின் பேரிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இதற்கு முன்னர் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர், அவரது மனைவி மற்றும் மேலும் ஒரு சந்தேகநபர் ஆகியோரை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நுவரெலியா நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி தெல்தெனிய வைத்தியசாலைக்கு அருகில் கார் ஒன்றில் இருந்து குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டிருந்தது. உயிரிழந்த பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டமையாலேயே இந்த மரணம் சம்பவித்துள்ளதாக பிரேத பரிசோதனையின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து உயிரிழந்த பெண்ணின் காதலர் எனும் கூறப்படும் நபரை பொலிஸார் தேடி வந்த நிலையில், யாழ்ப்பாணம் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். வெள்ளவத்தையில் இருந்து பஸ்ஸில் பிரதான சந்தேக நபர் அவரது மனைவி மற்றும் குழந்தை ஆகியோர் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த போதே இந்த கைது இடம்பெற்றிருந்தது. (அ)

# இரு பஸ்கள் மோதி 40 பயணிகள் காயம்!

கொழும்பு, ஜூன். 27

மாத்தறை -தலல்ல வீதியில் உள்ள வஜிர வம்ச மாவத்தையில் இரண்டு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் குறைந்தது 40 பயணிகள் காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

காலியிலிருந்து அம்பாறைக்குச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றும், தங்காலையிலிருந்து மாத்தறைக்குச் சென்றுகொண்டிருந்த மற்றொரு பஸ்ஸூம் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த பயணிகள் மாத்தறை மற்றும் பத்தேகம வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
27.06.2026 சனிக்கிழமை
பராபவ வருடம், ஆனி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# மாகாணசபைகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து

2025 உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தியின் வாக்குகளில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டதை தொடர்ந்து எந்தவொரு எதிர்காலத் தேர்தலிலும் அரசாங்கத்துக்கு பெரும் பின்னடைவு ஏற்படும் என்று தென்னிலங்கை எதிரணிக் கட்சிகள் நம்புகின்றன்றன. அதன் காரணத்தினால் மாத்திரமே அவை மாகாணசபை தேர்தல்களை நடத்துமாறு சவால் விடுத்த வண்ணமிருக்கின்றன.

அந்த கட்சிகளுக்கு மாகாணசபைகள் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் உண்மையான நோக்கத்தைப் பற்றி எந்த அக்கறையும் கிடையாது. அவை ஆட்சியில் இருந்தபோது மாகாணசபைகளின் அதிகாரங்களை பறிப்பதில் தீவிர கவனம் செலுத்தின. ஆளும் கட்சி மக்கள் மத்தியில் ஆதரவை இழந்து வருகிறது என்று காண்பிக்க வேண்டும் என்பது மாத்திரமே அவற்றின் ஒரே நோக்கம்.

வெறுமனே கோரிக்கையை விடுப்பதைத் தவிர, தேர்தல்களை நடத்த அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க போராட்டம் என்று ஒரு துரும்பைக்கூட அசைப்பதற்கு இந்த கட்சிகள் தயாராயில்லை.

இத்தகைய பின்புலத்தில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த கருத்துக்கள் கவனத்தைப் பெறுகின்றன.

"தங்களின் அரசியல் பலத்தைக் காட்டவே எதிரணிக் கட்சிகள் மாகாணசபை தேர்தல்களைக் கோருகின்றன. தற்போதைய சூழ்நிலையில் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் புலப்படவில்லை. சிலவேளை, அடுத்த மாகாணசபை தேர்தல்களுக்கு முன்னதாக 2029 ஜனாதிபதி தேர்தலோ அல்லது பாராளுமன்ற தேர்தலோ கூட நடத்தப்படலாம்.

"உண்மையில், அதிகாரப்பகிர்வுக்கான தேவையும் அதற்கான கோரிக்கையும் வடக்கு, கிழக்கு அரசியல் கட்சிகளுக்கும் மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்குமே. அவசியமானவையாகும். ஏனைய பிரதான அரசியல் கட்சிகள் மாகாணசபை தேர்தல்களை இன்னொரு தேர்தலாக மாத்திரமே பார்க்கின்றன.

தற்போதைய சூழலில் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்பட்டாலும் கூட, அது மாகாணசபை என்ற உண்மையான கோட்பாட்டுக்கோ அல்லது அதிகாரப் பகிர்வு என்ற நோக்கத்துக்கோ எந்தப் பயனையும் தரப்போவதில்லை " என்று தேசப்பிரிய கூறியிருக்கிறார்.

அவரின் கருத்துக்களின் பின்னால் பாரதூரமான எச்சரிக்கை ஒன்று இருக்கிறது. அதாவது, மாகாணசபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படாமல் விடப்படக்கூடிய ஆபத்துக்கு அப்பால் அதிகாரப்பகிர்வுக்கான ஒரு ஏற்பாடு என்ற வகையில் அதன் எதிர் காலமும் கேள்விக்கு உள்ளாகிறது.

அத்தகைய ஒரு நிலை தோன்றுமானால், இன்று தேர்தல்களை நடத்துமாறு இடையறாது கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கும் தென்னிலங்கை எதிரணிக் கட்சிகள் ஒன்றும் கவலைப்படப் போவதில்லை.

உண்மையில், அதிகாரப் பகிர்வுக்காகப் போராடிய தமிழ் மக்களுக்குத் தான் பெரிய பாதிப்பு ஏற்படும். அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியிலும் மாகாணசபைகளில் "ஒன்றுமில்லை" என்ற நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு சில கட்சிகளுக்கு எந்த கவலையும் இல்லை. மாகாணசபைகள் இல்லாமல்போனால் ஏதோ தங்களுக்கு "வெற்றி" கிடைத்தைப் போன்று வக்கிரத்தனமாக மகிழக்கூடிய மனநிலையைக் கொண்டவையாக அந்த கட்சிகள் இருக்கின்றன.

மகிந்த தேசப்பிரிய கூறியதைப் போன்று மாகாணசபைகளின் தேவையை உணருகின்ற வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளும் மலையகத் தமிழ்க் கட்சிகளும் அரசாங்கத்தை மாகாணசபை தேர்தல்களை தாமதிக்கும் தந்திரோபாயங்களை விடுத்து இனிமேலும் தாலந்தாழ்த்தாமல் தேர்தல்களை நடத்த நிர்ப்பந்திப்பதற்கு மக்களை அணிதிரட்டி ஜனநாயக அடிப்படையிலான போராராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

இல்லையேல், இலங்கை அரசியலமைப்பில் இருக்கக்கூடிய ஒரேயொரு அதிகாரப்பகிர்வு ஏற்பாடான இந்த மாகாணசபைகளையும் நாளடைவில் இழந்து நிற்கும் ஆபத்து இருக்கிறது.

# சிக்கலில் தவிக்கும் ஈரான் ஒப்பந்தத்தின் அடையாளமாக விளங்கும் அமெரிக்க துணை ஜனாதிபதி வான்ஸ்



ஜே.டி.வான்ஸ் ஈரான் போர்நிறுத்த உடன்படிக்கையின் முகமாகத் தன்னை முன்னிறுத்தியதன் மூலம், தனது துணை ஜனாதிபதிப் பதவிக் காலத்தின் மிகப்பெரிய சூதாட்டத்தைக் கையில் எடுத்துள்ளார். ஏற்கனவே இந்த உடன்படிக்கை தோல்வியடையும் நிலையில் தள்ளாடிக்கொண்டிருக்கும் ஒரு பலவீனமான ஒப்பந்தமாகும்.

இருப்பினும், போரினால் பல மாதங்களாக முடங்கிக்கிடந்த அவருக்கு, தனது அரசியல் செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்திக்கொள்வதற்கான சிறந்த வாய்ப்பாக இது அமையக்கூடும்.

கடந்த பெப்ரவரி மாதம் ட்ரம்ப் நிருவாகம் ஈரானில் போரைத் தொடங்கியதிலிருந்து, அமெரிக்கத் துணை ஜனாதிபதியின் முகாமில் ஒருவித மந்தநிலை நிலவி வந்தது. முந்தைய அரசாங்கங்களின் "முடிவில்லாப் போர்களை" கடுமையாக எதிர்த்த வான்ஸ் (இவர் ஈராக்கில் இராணுவச் செய்தித் தொடர்பாளராகப் பணியாற்றியவர்), இப்போது ஒரு தலைமுறையில் அமெரிக்கா மேற்கொண்ட மிகப்பெரிய மத்திய கிழக்கு இராணுவத் தலையீட்டை நியாயப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளார்.

பகிரங்கமாக, அவர் மார்-ஏ-லாகோவில் (Mar-a-Lago) உள்ள போர் ஆலோசனைக் குழுவிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டார், மேலும் ஈரான் போர் திட்டமிடல்களிலிருந்தும் தூர விலகியிருப்பது போலத் தோன்றியது. ஆனால், தனிப்பட்ட முறையில், அவர் இந்தப் போரை எதிர்ப்பதாக ஊடகவியலாளர்களுக்குத் தகவல்கள் கசியவிடப்பட்டன.

"அவர் இந்தப் போர் விவகாரத்தில் மிகுந்த அசௌகரியமாக இருப்பதை எங்களால் பார்க்க முடிந்தது," என்று செனட் சபையில் இருந்த வான்ஸின் முன்னாள் சக ஊழியர் ஒருவர் கூறினார்.

"அவர் இந்த அரசாங்கத்தில் இணைந்தது இதற்காக அல்ல... ஆனால் ட்ரம்ப்புடன் இணைந்து பயணிக்க அவர் முடிவு செய்தார்." "இப்படி நடக்கும் என்று அவர் முன்பே அறிந்திருந்தார்," என்றும் அந்த செனட்டர் மேலும் கூறினார்.

ஜே.டி. வான்ஸ், ஒரு காலத்தில் "தீவிர நாத்திகராக" இருந்து, தற்போது அமெரிக்காவின் மிகவும் சக்திவாய்ந்த கத்தோலிக்கராக மாறியுள்ளார். அவர் தனது ஆன்மீக நம்பிக்கையை எவ்வாறு பயன்படுத்துவார்?

இந்தச் சூழல், 2028 ஜனாதிபதி தேர்தலில் வான்ஸ் போட்டியிடுவதற்கான வாய்ப்புகளுக்குக் கூட ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதாக உள்விவகாரங்களை அறிந்தவர்கள் கூறுகின்றனர். அங்கு அவர் இன்னும் குடியரசுக் கட்சியின் முதன்மையான வேட்பாளராகக் கருதப்பட்டாலும், வெளியுறவுக் கொள்கையில் தீவிரப்போக்கைக் கொண்ட மார்கோ ரூபியோவிடம் தனது செல்வாக்கை இழந்துள்ளார். ரூபியோ ஒரு திறமையான முதன்மை இராஜதந்திரியாகவும் பாதுகாப்பு அதிகாரியாகவும் தன்னை நிரூபித்துள்ளார்.

"பல வாக்காளர்களின் பார்வையில், வான்ஸ் தற்போது கடுமையான பொருளாதாரச் சரிவு, புவிசார் அரசியல் வீழ்ச்சி மற்றும் ஈரானுடனான பேரழிவு தரும் போர் ஆகியவற்றைத் தலைமை தாங்கி நடத்தும், மக்களிடையே செல்வாக்கு இழந்து வரும் ஓர் அரசாங்கத்தின் பிரதிநிதியாகவே விளங்குகிறார்," என்று அமெரிக்க கன்சர்வேடிவ் (American Conservative) இதழின் ஆண்ட்ரூ டே எழுதியுள்ளார்.

இந்த இதழ் அமெரிக்காவின் புதிய பழமைவாத (neoconservativsm) கொள்கைகளையும் வெளிநாட்டு இராணுவத் தலையீடுகளையும் கடுமையாக விமர்சிப்பதாகும். "2028ஆம் ஆண்டில் வான்ஸ் வெற்றி பெறுவது உறுதி என்று கருதப்பட்ட நிலை மாறி, இப்போது அதை அப்படிக் கருத முடியாது... வான்ஸ் இதில் முதலிடத்திற்கு வர வேண்டுமானால், முதலில் அவர் தன்னை யார் என்று நிலைநிறுத்த வேண்டும்," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானிய தூதர்கள் மூலம் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொறுப்பை வான்ஸ் ஏற்றபோது, அவர் ஒரு பெரிய ஆபத்தை எதிர்கொள்கிறார் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கவில்லை. 1979ஆம் ஆண்டு ஈரானிய புரட்சி மற்றும் இராஜதந்திர நெருக்கடிக்குக்குப் பிறகு, அமெரிக்க மற்றும் ஈரானிய உயர் அதிகாரிகளுக்கு இடையே நடைபெறும் மிக உயர்மட்டப் பேச்சுவார்த்தைக்கு அவர் தலைமை தாங்கி வருகிறார்.

## இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள்

பொதுவெளியில் கசிந்தபோது, ஈரானுக்கு தடைகளில் இருந்து நிவாரணம், முடக்கப்பட்டுள்ள சொத்துக்களை விடுவித்தல் மற்றும் பிற சலுகைகளை வழங்கும் நிலைக்கு வான்ஸ் தள்ளப்பட்டார். இது அவரது சொந்தக் கட்சியிலேயே உள்ள தீவிரப்போக்குடைய மற்றும் இஸ்ரேல் ஆதரவு உறுப்பினர்களின் விமர்சனங்களுக்கு அவரை இலக்காக்கியது. பகிரங்கமாக, ஈரானிய அதிகாரிகளுடனான இந்த உயர்மட்டத் தொடர்புகள் குறித்து அவர் பெருமிதம் கொண்டார், இதனால் அவர் ஈரானின் வாக்குறுதிகளை மிக எளிதாக நம்பிவிடுகிறார் என்று விமர்சகர்கள் குற்றம் சாட்டினர்.

நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில், பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும்போதே ஈரானின் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்படும் என்றும் ஈரானிய தூதர்களைப் படுகொலை செய்யப்போவதாகவும் ட்ரம்ப் அச்சுறுத்தி, வான்ஸின் முயற்சிகளைத் தொடர்ந்து பலவீனப்படுத்தி வந்தார்.

வழக்கம் போல், வான்ஸ் ட்ரம்ப்பின் இந்த கடுமையான போக்கை நயமாகக் கையாள முயன்றார். "ஈரானியர்கள் நேற்று எங்களிடம் கூறியதற்கு நாங்கள் என்ன பதிலளித்தோம் என்றால், நீங்கள் "ட்ராஸ் ரோக்" (trash talk - வம்பளப்பு அல்லது சண்டைக்கு இழுத்தல்) எனப்படும் மில்லினியல்கள் (millennials) பயன்படுத்தும் பாணியில் பேசும்போது, அமெரிக்க ஜனாதிபதி அதற்குப் பதிலளிக்க மாட்டார் என்றோ, உண்மையை நிலைநாட்ட மாட்டார் என்றோ நீங்கள் எதிர்பார்க்க முடியாது," என்று அவர் கூறினார்.

இருப்பினும், இந்த சாத்தியமற்ற ஈரான் ஒப்பந்தத்தை முன்னோக்கி நகர்த்துவதன் மூலம், இந்த அரசாங்கத்தின் ஆரம்ப நாட்களுக்குப் பிறகு முதல் முறையாக வான்ஸ் ஒரு முயற்சியைத் தானாகவே முன்னெடுத்துள்ளார். இதன் மூலம் ஒரு போரை முடிவுக்குக் கொண்டு வரவும் அடுத்த தேர்தல் சுழற்சிக்கு முன்னர் இராணுவத் தலையீடுகளுக்கு எதிரானவர் என்ற தனது பிம்பத்தை மீண்டும் புதுப்பிக்கவும் அவர் முயற்சிக்கிறார்.

கிட்டத்தட்ட ஒரு வார காலமாக, இந்த ஈரான் ஒப்பந்தம் மற்றும் ட்ரம்ப்பின் பிற சர்ச்சைக்குரிய கொள்கைகளை அமெரிக்க மக்களுக்கு விளக்குவதற்காக வான்ஸ் தொலைக்காட்சிகளில் தொடர்ந்து தோன்றி வந்தார். "தி வியூ" (The View) நிகழ்ச்சியில் அவர் கடுமையான கேள்விகளுக்கு உள்ளானார், அங்கு வூப்பி கோல்ட்பர்க், ஜோய் பெஹார் ஆகிய இருவரும் பதவியில் இருக்கும் துணை ஜனாதிபதியை நோக்கி சாடல்களைத் தொடுத்தனர். ("நீங்கள் அவரது மொழிபெயர்ப்பாளரா, அல்லது துணை துணை ஜனாதிபதியா? சொல்லுங்கள்," என்று ஒரு கட்டத்தில் பெஹார் வான்ஸைப் பார்த்துக் கேட்டார்.)

நியூயார்க் டைம்ஸின் ரோஸ் தௌதாடுடன் பேசும்போது, வான்ஸ் பிராந்தியத்தில் இஸ்ரேலின் வெளியுறவுக் கொள்கை குறித்து வழக்கத்திற்கு மாறான கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார். இந்த பேச்சுவார்த்தை குறித்து இஸ்ரேலிய தீவிரப்போக்கு அரசியல்வாதிகளின் விமர்சனங்கள் பற்றிக் கேட்கப்பட்டபோது, "உங்களது துல்லியமான திட்டம் தான் என்ன? நீங்கள் 9 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நாடு. உங்கள் தேசிய பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கெல்லாம் எல்லோரையும் கொன்று குவிப்பது தான் தீர்வு என்று நீங்கள் நினைக்க முடியாது," என்று வான்ஸ் கூறினார்.

வான்ஸிற்கான ஆபத்து மிக அதிகமாக உள்ளது. கொள்கை விடயங்களில் வெள்ளை மாளிகை மிகவும் தளர்வாக இருந்தாலும், தோல்விகளை அது சகித்துக்கொள்வதில்லை என்பதை மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்தியுள்ளது. "இந்த அமைதி ஒப்பந்தம் வெற்றிகரமாக அமைந்தால், அதற்கான பெருமையை நான் எடுத்துக் கொள்வேன். அது தோல்வியடைந்தால், நான் ஜே.டி (வான்ஸ்) மீது பழி போடுவேன்," என்று ட்ரம்ப் இந்த ஒப்பந்தம் குறித்துக் கூறினார்.

இது, ஒரு வருடத்திற்கு முன்பு ரூபியோவை வைத்து ட்ரம்ப் செய்த அதே நகைச்சுவையின் மறுபதிப்பாகவே இருந்தது.

அப்போது ரூபியோ தான் புதிய ட்ரம்ப் அரசாங்கத்தில் தனித்துவிடப்பட்டவர் போலத் தோன்றினார். ஆனால் இப்போது வான்ஸ் அந்த இக்கட்டான சூழ்நிலையில் உள்ளார்.

(அண்ட ரூ றொத், த கார்டியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 27 சனிக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 14
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரயோதசி




**மேடம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். பிள்ளைகளின் வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்களால் ஆதாயம் அடைவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். நல்ல செய்தி வரும். சிலர் உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். நினைத்தது நிறைவேறு நாள்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். புதுமைபடைக்கும் நாள்.

**கடகம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**சிம்மம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சிகரமான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கவனமாக பழகுங்கள். இடம்பொருள்ஏவல்அறிந்துசெயல்படவேண்டும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் நிம்மதி இழப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். புகழ் கவுரவம் கூடும் நாள்.

**மகரம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்களின் திறமைகளால் மேலதிகாரி வியப்பார். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். பொறுமை தேவைப்படும்.

# வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தை பெற இதுவரை காலவரையறை விதிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூன். 27

வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN)பெற்றுக்கொள்வதற்காக யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் அண்மைய நாள்களாக காலையில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் தினமும் நிற்பது தொடர்பாக, மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் அவ் அலுவலகத்தின் பிராந்திய ஆணையாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடினார்.

மேற்படி கலந்துரையாடிய தற்கு அமைவாக பின்வரும் விவரங்களை பொதுமக்களுக்கு அரசாங்க அதிபர் தெரியப்படுத்தியுள்ளார்.

01.வரி செலுத்துநர் அடையாள இலக்கமானது (TIN) ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என எவ்விதமான காலவரையறையும் இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை.

02.வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. அவ்வாறு கட்டணம் செலுத்துவதோ அல்லது பெற்றுக் கொள்வதோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

03.ஏற்கனவே வரி செலுத்துநர் அடையாள இலக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பின் உரியவர் தனது தேசிய அடையாள அட்டையைக் காண்பித்து வரி செலுத்துநர் அடையாள இலக்கச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும்.

04.வரி செலுத்துநர் அடையாள இலக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காவிடின் நிகழ்நிலை (ஒன்லைன்) முறைமை மூலமாகவோ அதாவது www.ird.gov.lk அல்லது உள்நாட்டு இறைவரித் திணைகளத்தில் உரிய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து சமர்பிப்பதன் மூலமாகவோ பெற்றுக்கொள்ள முடியும். தற்போது பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கான ரின் சான்றிதழ் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

05.மேலதிக விபரங்களுக்கு 0212217333 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு அறிய முடியும்.

எனவே மேற்படி விவரங்களுக்கு அமைய, பொதுமக்கள் எதுவித பீதியும் அடையத் தேவையில்லை என அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(அ)

# போசாக்கு விழிப்புணர்வுப் பவனியும் கண்காட்சியும் நேற்று நெல்லியடியில்!

யாழ்ப்பாணம், ஜூன். 27

போசாக்கு மாதத்தை முன்னிட்டு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட போசாக்கு விழிப்புணர்வு நடைபவனியும், போசாக்கு விழிப்புணர்வு கண்காட்சியும் நேற்று நெல்லியடியில் இடம் பெற்றது.

நெல்லியடி பஸ் நிலையத்தில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் போசாக்கு விழிப்புணர்வு நடைபவனியை ஆரம்பித்து வைத்தார். பவனி நெல்லியடி சந்தியிலிருந்து ஆரம்பமாகி நெல்லியடி மத்திய கல்லூரி ஊடாக வதிரி சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து மாலை சந்தை வழியாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தை அடைந்தது. அங்கு போசாக்கு விழிப்புணர்வு கண்காட்சியும் இடம் பெற்றது.



இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள், பணியாளர்கள், பாடசாலைகளின் மாணவர்கள், பிரதேச முன் பள்ளிகளின் ஆசிரியர்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ச.திரவியராஜா, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை விசேட வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொது சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி திருமதி பிரியந்தி செந்தூரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் சிறப்பு அம்சமாக பழங்கஞ்சி வழங்கப்பட்டதுடன் போஷாக்கான உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டன.

(அ)

# 1 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் வவுனியா பொலிஸாரால் கைது!

வவுனியா, ஜூன். 27

வவுனியாவில் 21 கிலோ 600 கிராம் கேரள கஞ்சாவை கடத் திச்சென்ற ஒருவரை கைது செய் துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.



இந்த கைது நடவடிக்கை வவுனியா லக்சபானா வீதிக்கு அண் மையில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கி சென்ற காரில் கொண்டுவரப்பட்ட கஞ்சாவை மற்றொரு ஓட்டோவுக்கு மாற்ற முற்றப்பட்டபோது இந்த கைதுச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் இருவர் தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து பொதி செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 21கிலோ 600 கிராம் கேரள கஞ்சாவை பொலிஸார் மீட்டுள்ளதுடன், வாகனத்தையும், ஓட்டோவையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

இந்த கைது நடவடிக்கை வவுனியா தலைமை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சிரேஸ்ட பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம். யே.எஸ்.ரத்னமலல தலைமையில் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி கே.ஆர். இலங்கசிங்க உட்பட்ட பொலிஸ் குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

(அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் சத்துணவு பொருள் வழங்கல்

வடமராட்சி, ஜூன். 27

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் தொண்டைமானாறு தெற்கு கிராம சேவையாளர் பிரிவு ஜே-383, கெருடாவில் வடக்கு கிராமசேவையாளர் பிரிவு ஜே-386, கெருடாவில் தெற்கு கிராம சேவையாளர் பிரிவு ஜே-385 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 25 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் கடந்த புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஆச்சிரமத்தில் வைத்து இவற்றை வழங்கினார்.

மாதாந்தம் இந்த உதவித்திட்டம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# உயர் நீதிமன்ற வெற்றிடங்கள் குறித்து அவசர விவாதம் கோருகிறது எதிரணி!

## எம்.பிக்கள் சபாநாயகருக்கு கடிதம்

கொழும்பு, ஜூன். 27

உயர் நீதிமன்றத்தில் நிலவும் நீதியரசர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வலியுறுத்தியும், இது குறித்து பாராளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்தக் கோரியும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று விசேட பிரேரணை ஒன்றில் கையொப்பமிட்டுள்ளனர்.

உயர் நீதிமன்றத்தில் எட்டுக்கும் மேற்பட்ட நீதியரசர் பணியிடங்கள் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளன.

இந்த நீண்ட கால தாமதம் காரணமாக, நாட்டின் சட்டத்தின் ஆட்சியில் கடுமையான பாதிப்புகள் ஏற்படுவதாக எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.



அத்துடன், பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான அவர்களின் அணுகல் என்பவற்றிலும் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் எதிரணிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

நீதிமன்ற கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள இந்த நிலை குறித்து விவாதிக்கவும், இதில் பாராளுமன்றத்தின் வகைகூறல் மற்றும் பொறுப்புக்கூறலை வலியுறுத்தவும் எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இதற்கமைய, பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 83(1) இன் கீழ் விசேட விவாதமொன்றை நடத்துவதற்கு அனுமதி கோரி, சபாநாயகருக்கு பிரேரணைக் கடிதம் ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இதற்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கையே நேற்று பாராளுமன்ற வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

# நிதி செயல் நுணுக்கக் கூற்று அறிக்கையில் முரண்பாடுகள்

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 27

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நாட்டின் நிதி செயல் நுணுக்கக் கூற்று மற்றும் நிதி ஸ்திரத்தன்மை குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முரண்பாடான கருத்துக்கள் நிலவுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் மீது வரிச்சுமையைத் திணித்தே இந்நாட்டில் முதன்மை உபரி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வரிகளை அதிகரித்து, நலன்புரி உதவிகள் மற்றும் மூலதனச் செலவினங்களைக் குறைத்ததன் மூலமே அரசாங்க வருமானம் அதிகரித்துள்ளது.

இதேவேளை, 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடன் தவணைக் கொடுப்பனவுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை பாராளுமன்றத்துக்கு தெளிவான அறிக்கை



எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே இந்த அறிக்கை தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்று அவசியமானது.

தற்சமயம் டெங்கு நோயாளர்களின் பதிவு எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றன. தற்போது, நாடு முழுவதும் சுமார் 49,000 டெங்கு பாதிப்புகள் பதிவாகியுள்ளன. இவற்றில் 25,000 பாதிப்புகள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளன என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. ஆகையினால், இந்த நோய் பரவலை இப்போதே கட்டுப்படுத்த அரசாங்கம் துரித நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்- என்றார்.

(அ)

# பிக்குகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசியல் தலைமைகள் மௌனம்!

## சந்திரிகா குமாரதுங்க விசனம்

கொழும்பு, ஜூன். 27

அண்மையில் பௌத்த பிக்குகளுக்கு எதிராகப் பதிவான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசியல் தலைவர்கள் வாய் திறக்காமல் மௌனம் காப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பௌத்த தர்மத்தை சீரான வழியில் பாதுகாப்பதற்குரிய வழிமுறைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் நாட்டிலுள்ள பௌத்தர்கள் அனைவரும் இணைந்து பகிரங்க கருத்தாடல்களில் ஈடுபடவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டிருக்கும் காணொளியில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேலும் கூறியிருப்பதாவது:

எமது நாட்டை நேசிக்கும் இலங்கையர்கள் பலர் தற்போது வெகுவாக அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். மனிதனின் நிலைத்திருப்பு என்பது அவர் நம்பும் கொள்கையிலேயே தங்கியிருக்கிறது என்பது போதிய தெளிவுள்ள சகலருக்கும் தெரியும். அந்தக் கொள்கை மத ரீதியானதாகவோ அல்லது அரசியல் ரீதியானதாகவோ அல்லது வேறு ஏதேனும் விடயங்களுடன் சம்பந்தப்பட்டதாகவோ இருக்கலாம். எனவே அவ்வாறான கொள்கைகள் அல்லது அதனை அடிப்படையாகக்கொண்ட கட்டமைப்புக்கள் சீர்குலையும் போது, அதன்மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் உடைந்து போகிறார்கள்.

இன்றளவிலே எமது நாட்டில் வாழும் பௌத்தர்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு முகங்கொடுத்திருக்கிறார்கள். ஒரு நாட்டைப் பொறுத்தமட்டில், எமது நம்பிக்கையோ அல்லது கொள்கையோ அதனுடன் தொடர்புடைய தலைவர் ஊடாகவே முன்கொண்டு செல்லப்படுகிறது. எனவே பௌத்த மதத்



தைப் பொறுத்தமட்டில், அதற்குத் தலைமை வகிப்பவர்களாக நாம் மகா சங்கத்தினரையே கருதுகிறோம். இருப்பினும் அண்மைய காலங்களில் பெரும்பாலான பிக்குகள் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாக நாம் கேள்விப்பட்டோம். அதற்கும் அப்பால் நாம் பெரிதும் கௌரவமளிக்கும் அட்டமஸ்தானாதிபதி சிறுமியொருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக அறிந்தோம். ஆனால் இதுகுறித்து எந்தவொரு அரசியல் தலைவரும் வாய் திறக்கவில்லை.

அரசியல் தலைவரோ அல்லது மதத்தலைவரோ, யாராக இருந்தாலும் தலைவர் என்பவர் மக்களுக்கு வழிகாட்டியாக செயற்படுபவர் ஆவார். இன்றைய இளைஞர்கள் முறையான வழிகாட்டல்களின்றி போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்றனர். இவை பற்றி அரசியல் தலைவர்கள் ஏன் பேசுவதில்லை? அவர்கள் தமக்குக் கிடைத்த வாக்குகளை எண்ணிக் கொண்டி ருக்கிறார்கள். இவற்றை அவதானித்ததன் பின்னர், இது குறித்து நாட்டின் சிரேஷ்ட பிரஜை என்ற ரீதியிலும், இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையிலும் நான் பேசவேண்டும் என்று நினைத்தேன்.

அதற்கமைய இதுபற்றி நான் மகாசங்கத்தேரர்களுக்குக் கடிதமொன்றை எழுதினேன். குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்தும் அதேவேளை, இவ்வாறான சம்பவங்களால் நாம் மதிப்பளிக்கும் பௌத்த தர்மம் சீர்குலைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதில் கேட்டுக்கொண்டேன்-என வலியுறுத்தினார்.

(அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விவகாரம்;

# சரித் அபேசிங்கவை கட்சியிலிருந்து உடன் நீக்கியது ஐக்கிய மக்கள் சக்தி!

கொழும்பு, ஜூன். 27

ஹொரணை தொகுதி அமைப்பாளர் சரித் அபேசிங்கவின் கட்சி உறுப்புரிமை மற்றும் அவர் வகித்த அனைத்துப் பதவிகளையும் ஐக்கிய மக்கள் சக்தி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தியுள்ளது.

2023-ஆம் ஆண்டில் நடந்ததாகக் கூறப்படும் இலஞ்ச ஊழல் விவகாரம் தொடர்பாக நேற்று முன் தினம் அபேசிங்கே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் குற்றச் சாட்டுக்குரிய இந்த சம்பவம் நிகழ்ந்தபோது, அபேசிங்க தமது கட்சியின் உறுப்பினராகவோ அல்லது அமைப்பாளராகவோ இருக்கவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தி அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது.



மேலும், ஊழல் அல்லது பிற சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்துவதை ஆதரிக்கத் தயங்கமாட்டோம் என்றும், அத்தகைய நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை எதிர்க்கவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தி அந்த அறிக்கையில் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. (அ)

# இளைஞர்களை குறிவைக்கும் போதைப்பொருள் அபாயம்!

விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரம்



திருமலை, ஜூன். 27

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, திருகோணமலை வலயத்திற்குட்பட்ட கிண்ணியா அல் மீனா வித்தியாலயம் ஏற்பாடு செய்த போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலமும் வீதி நாடகமும் நேற்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.வை. ஹதியத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு, "போதையின் உச்சம் தற்காலிகம், சேதம் நிரந்தரம்" எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழிப்புணர்வு பேரணி பாடசாலை வளாகத்திலிருந்து ஆரம்பமாகி, பிரதான வீதி வழியாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் பயணித்து, மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

இந்த ஊர்வலத்தின் போது, போதைப்பொருள் பாவனையின் ஆபத்துக்கள் மற்றும் சமூகச் சீரழிவுகளை விளக்கும் வகையில் மாணவர்கள் பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிச் சென்றனர்.

தொடர்ந்து, இன்றைய இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதால் அவர்களது குடும்பங்களிலும், சமூகத்திலும் ஏற்படும் விபரீதங்கள், பொருளாதார இழப்புகள் மற்றும் மன உளைச்சல்களைத் தத்ரூபமாக விவரிக்கும் விழிப்புணர்வு வீதி நாடகம் ஒன்றும் மாணவர்களால் அரங்கேற்றப்பட்டது. (அ)

# திருக்கோவில் கல்வி வலயம் மீண்டும் சாதனை!

அம்பாறை, ஜூன். 27

அண்மையில் வெளியான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருக்கோவில் கல்வி வலயம் மீண்டும் சாதனை படைத்துள்ளது.

இலங்கையில் தேசிய ரீதியில் உள்ள 100 கல்வி வலயங்களில், மிகவும் பின்தங்கிய பாடசாலைகளைக் கொண்ட திருக்கோவில் கல்வி வலயம் 4ஆம் இடத்தைப் பெற்று சிறப்பான சாதனையைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் 3ஆம் இடத்தை பெற்றுள்ளதோடு, 33 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

மேலும், ஒரே ஒரு 9 டபிள்யூ பெறுபேறு மட்டுமே பதிவாகியுள்ளதால், கிழக்கு மாகாணத்தில் ஆகக் குறைந்த 9 டபிள்யூ பெறுபேறுகளைக் கொண்ட கல்வி வலயமாக திருக்கோவில் கல்வி வலயம் திகழ்வதும் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

கடந்த ஆண்டில் தேசிய ரீதியில் 5ஆம் இடத்தில் இருந்த திருக்கோவில் கல்வி வலயம், இவ்வாண்டு 4ஆம் இடத்துக்கு முன்னேறி, தனது கல்வித் தரத்தையும் தொடர்ச்சியான முன்னேற்றத்தையும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இவ்வருடத்தில் தேசிய ரீதியில் கண்டி, அக்கரைப்பற்று, கல்முனை, திருக்கோவில், வலஸ்முல்ல ஆகிய வலயங்கள் முதல் ஐந்து இடங்களை கைப்பற்றியுள்ளன. (அ)

# மட்டக்களப்பில் இந்த ஆண்டு முதல் டெங்கு மரணம் பதிவு!

மட்டக்களப்பு, ஜூன். 27

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கர்ப்பிணித் தாய் ஒருவர், குழந்தையை பிரசவித்த நிலையில், உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பேத்தாலை பகுதியைச் சேர்ந்த ஜே.பிரியா என்ற கர்ப்பிணிப் பெண், கடந்த 17ஆம் திகதி காய்ச்சல் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, கடந்த 22ஆம் திகதி முதல் குழந்தையைப் பிரசவித்த அவர், தொடர்ந்து ஏழு நாள்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, உயிரிழந்த பெண்ணின் குடும்பத்தினர் வைத்தியசாலை முன்பாக நேற்று முன் தினம் இரவு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ)

# கடற்கரைகளில் இல்மனைட் அகழ ஒருபோதும் இடமளிக்க முடியாது!

பொத்துவில் பிரதேச சபை தீர்மானம்

அம்பாறை. ஜூன். 27

பொத்துவில் பிரதேசத்துக்கு உட்பட்ட கடற்கரை பகுதிகளில் இல்மனைட் உள்ளிட்ட கனிய வளங்கள் அகழ்வதற்கு ஒரு போதும் இடம் அளிக்க முடியாது என தீர்மானம் ஒன்று பொத்துவில் பிரதேச சபை மாதாந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம்எஸ்எம்.முஷரப் தலைமையில் நடைபெற்ற மாதாந்த அமர்வில் இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர் த.சுபோகரன் முன்வைத்த பிரேரணைக்கு அமைவாக இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொத்துவில் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன் தினம் புதன்கிழமை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

எமது பிரதேச வளங்களை குறிப்பாக கனிய வளங்களை சுரண்ட யாருக்கு அனுமதிக்க முடியாது. சுற்றுலா மையங்களை சுரண்டுவதற்கும் அனுமதிக்க முடியாது என்று தவிசாளர் முஷரப் அங்கு தெரிவித்தார். (அ)

# ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன். 27

இஸ்லாமிய மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயன்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு, ஜூலை 31ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கை விசாரிக்கும் நீதிபதி விடுமுறையில் இருந்ததால், வழக்கு இன்று மற்றொரு மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, முன் விசாரணைக்காக வழக்கை ஜூலை 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# பொசன் தினத்தை முன்னிட்டு விசேட ரயில் சேவை ஏற்பாடு

கொழும்பு, ஜூன். 27

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் மற்றும் மிஹிந்தலை ஆகிய புனித தலங்களுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக விசேட ரயில் சேவைகளை இயக்குவதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வழக்கமான ரயில் சேவைகளுக்கு மேலதிகமாக இந்த விசேட ரயில் சேவைகள் நாடளாவிய ரீதியில் இயக்கப்படவுள்ளன.

இதற்கமைய, இன்று முதல் 30ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்த விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# சூரிய மின்கட்டமைப்புகளை தற்காலிகமாக நிறுத்துங்கள்!

வலுசக்தி பிரதி அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 27

மின்சார கட்டமைப்பின் நிலைத்தன்மையை பேணுவதற்காக, இன்று முதல் 29ஆம் திகதி வரை கூரைகளில் பொருத்தப்பட்டுள்ள 300 கிலோவோட் மேற்பட்ட சூரிய மின்சக்தி கட்டமைப்புகளை தற்காலிகமாக செயலிழக்கச் செய்யுமாறு வலுசக்தி பிரதி அமைச்சர் முஹம்மது இல்யாஸ் முஹம்மது அர்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அமைப்புகளை நிறுத்தி வைப்பதன் மூலம் கடந்த வெசாக் தினத்தில் ஏற்பட்ட திடீர் மின்சாரத் தடையைத் தவிர்க்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை மின் கட்டமைப்பின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஆட்சியாளர்களை...

தடவையில் ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் பணிக்காக செல்லும் மிகப்பெரிய குழுவாக இந்தக் குழு அமைந்துள்ளதாகவும், ஒரு ஜனாதிபதி நேரடியாக வந்து வாழ்த்து தெரிவிக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவெனவும் குறிப்பிடப்பட்டது.

ஹைட்டியில் நிலவும் வன்முறை மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமையை கட்டுப்படுத்தி, அங்கு அமைதியையும் மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கில் இலங்கை இந்தப் படைப்பிரிவை அனுப்புகிறது.

இந்தப் பணிக்காக இராணுவத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 900 வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 189 அதிகாரிகள் மற்றும் நிலக்கண்ணிவெடிகள், மரணப் பொறிகளை செயலிழக்கச் செய்வதில் விசேட பயிற்சி பெற்ற 43 பெண் இராணுவ உறுப்பினர்களும் இணைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கவச வாகனங்கள், இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'யுனி பபல்' வகை வாகனங்கள் மற்றும் விசேட பாதுகாப்பு வாகனங்களும் இந்தப் படைப்பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க,

"நமது நாட்டின் கீர்த்தியையும் பெருமையையும் முன்னிறுத்தி, உலக அமைதிக்காக முக்கியமான பணிக்காக நீங்கள் செல்கிறீர்கள். இலங்கையின் கௌரவத்தை உங்கள் தோள்களில் சுமந்துகொண்டு செல்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்" என தெரிவித்தார்.

உலகின் செல்வந்த நாடாக மாறுவது சவாலாக இருந்தாலும், உலகின் பெருமைமிக்க நாடாக மாறுவதற்கான வாய்ப்பு இலங்கைக்கு உள்ளது என தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக பொருளாதார ரீதியாக வலுவான அரசை உருவாக்க வேண்டும் எனவும் கூறினார்.

ஒரு நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்தால், அந்த நாட்டின் சர்வதேச கௌரவமும் பாதிக்கப்படும் என குறிப்பிட்ட அவர், கடனை செலுத்த முடியாத மற்றும் பொருளாதார ரீதியாக பலவீனமான நாடாக இருக்காமல், வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவது அரசின் முக்கிய இலக்கு என தெரிவித்தார்.

அண்மைய பொருளாதார முன்னேற்றங்களை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சவால்களை எதிர்கொள்ளக்கூடிய நிலைக்கு நாடு வந்துள்ளதாக கூறினார்.

இயற்கை அனர்த்தங்கள் மற்றும் பொருளாதார அழுத்தங்கள் ஏற்பட்ட போதிலும், அவற்றை சமாளிக்கும் திறன் கொண்ட பொருளாதாரம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பெருமையை நிலைநாட்ட சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்த ஜனாதிபதி,

"சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கை நடைமுறையில் அமுல்படுத்தப்பட வேண்டும். ஒருவர் தவறு செய்தால், அவரது பதவி அல்லது நிலையைப் பொருட்படுத்தாமல் சட்டம் செயல்பட வேண்டும்" என்றார்.

சர்வதேச ரீதியில் சட்டத்தை மதிக்கும் நாடாக இலங்கை உருவாக வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"எந்தவொரு பிரஜையும் ஆட்சியாளருக்கு பயந்து வாழ வேண்டியதில்லை. ஆட்சியாளருக்கு அடிபணிந்து ஒரு நாடு முன்னேற முடியாது. மக்களுக்கு ஆட்சியாளர்களை கேள்வி கேட்கும் உரிமை உள்ளது" என ஜனாதிபதி தெரிவித்தார்.

சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை மதிக்கும் நாடாக இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இராணுவத்தின் சேவையை பாராட்டிய ஜனாதிபதி, நாட்டின் பாதுகாப்புக்காக நேர்மையாக பணியாற்றிய இராணுவத்தினரும் பொலிஸ் உறுப்பினர்களும் பாதுகாக்கப்படுவார்கள் என தெரிவித்தார்.

அதேவேளை, சில குழுக்களின் அதிகார தேவைகளுக்காக இராணுவத்தின் கௌரவத்துக்கும் நாட்டின் பெயருக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் கூறினார்.

"இது பழிவாங்கும் நடவடிக்கை அல்ல. இராணுவத்தின் கௌரவத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கை. நடந்த குற்றங்களை மறைத்து வைப்பதன் மூலம் நாட்டின் பெருமையை பாதுகாக்க முடியாது" என ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

## இலங்கைக்கு 57.4மில்...

கட்டமைப்புக்களின் கூட்டு நிதியளிப்பு என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

அதற்கமைய இத்திட்டத்துக்காக மதிப்பிடப்பட்ட மொத்த செலவு 80.5 மில்லியன் டொலராக உயர்வடைந்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் அரசுக்கு சொந்தமான இரண்டு மின்சார நிறுவனங்களான எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் லங்கா எலக்ட்ரிசிட்டி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றுக்கு பெரிய அளவிலான சூரிய மின்னுற்பத்திக் கட்டமைப்புகளிலிருந்து மின்சாரத்தை ஒன்றிணைத்து தகுதியுடைய நுகர்வோருக்கு மெய்நிகர் முறையில் விநியோகிக்கும் ஒரு மாதிரியை உருவாக்க முடியும்.

"இந்தத் திட்டம் இலங்கைக்குக் குறைந்த விலையிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கிடைப்பனவை மேம்படுத்த உதவுவதுடன், நெகிழ்வானதும் சகலரையும் உள்ளடக்கியதுமான மின்சார துறையை வலுப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கும்" என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் நாயகம் ஷானன் கவுலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இது சிறு வணிகங்களுக்கு ஆதரவளிப்பதுடன், விநியோகக் கட்டமைப்பை நவீனமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலை மேம்படுத்தல் என்பவற்றுக்கும் பங்களிப்புச் செய்யும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ)

## மூடப்படும் அபாயத்தில்...

போக்கைப் பின்பற்றுகின்றன. சூரியசக்தித் துறையில் ஈடுபட்டுள்ள பல நிறுவனங்கள் இன்று மூடப்படும் அபாயத்தில் உள்ளன.

சூரியசக்தித் துறையில் ஆயிரக்கணக்கானோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் பணியாற்றி வந்த நிலையில், அரசாங்கத்தின் கொள்கைகளால் இந்தத் துறை இன்று பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

நாட்டின் 2030 ஆம் ஆண்டுக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை அடைவதில் அரசாங்கத்திடம் முறையான திட்டமிடல் இல்லை . அதற்கு தெளிவான வரைபடம் தேவை. எரிசக்தி நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் மற்றும் மின்சாரக் கட்டணக் குறைப்பு ஆகியவற்றால் இந்தத் துறை பெரும் பொருளா தார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது - என்றார்.

அதற்கு பதிலளித்த வலுசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக்க-

சூரியசக்தி உற்பத்தியை மாத்திரம் அதிகரிப்பது போதாது . மின்சார விநியோகக் கட்டமைப்பின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

மின் தேவை குறைவாக இருக்கும் காலங்களில் புதுப்பிக்கத்தக்க மின்சாரம் அதிகரிப்பது கட்டமைப்பில் சிக்கலை ஏற்படுத்தும் என்பதால், அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகின்றோம்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர முன்வைத்த தரவுகள் தவறானவை. ஆதாரங்களுடன் கூடிய தரவுகளைப் பேசவேண்டியது அவசியமாகும்-என்றார். (அ)

## தங்களுக்கு நெருக்கமான...

பாராளுமன்றக் கூட்டத்தொடரில் உரையாற்றிய அவர், எதிர்க்கட்சிகளை விமர்சிப்பதற்கு முன்னதாக அரசாங்கம் தன் பக்கமுள்ள தவறுகளைத் திரும்பிப் பார்க்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்திற்குள் எவ்வாறு நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி நேற்று உரையாற்றினார். கடந்த காலங்களில் உயிர்த்த ஞாயிறு குண்டுதாரிகளின் பிள்ளைகள் ஜே.வி.பி கட்சியின் தேசியப் பட்டியலில் இடம்பெற்றிருந்ததாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. தங்களது கட்சியின் மிக முக்கியமான ஆதரவாளராகவும், நிதியுதவி வழங்குபவராகவும், கட்சியின் முக்கிய செயற்பாட்டாளராகவும் இருக்கும் ஒருவரின் பிள்ளைகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டிருக்கும் போது, 'தவறான மனிதர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள் எங்கள் மத்தியிலும் இருக்கிறார்கள்' என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

தங்களது கட்சியில் தவறு செய்தவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பேசும் ஆளுந்தரப்பினர், தற்போது பாராளுமன்றத்தின் முன்வரிசைகளில் அமர்ந்திருக்கும் அமைச்சர்களைக் கவனிப்பதில்லை. நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனைபெற்ற பல மக்கள் பிரதிநிதிகள் தற்போதைய அரசாங்கத்தின் முன்வரிசைகளிலும், பாராளுமன்ற ஆசனங்களிலும் அமர்ந்திருக்கிறார்கள்.

தற்போதைய அரசாங்கத்தில் உள்ள சில அமைச்சர்களுக்கு எதிரான முக்கிய வழக்குகள் அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசெல்லப்படாமல், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

ஒரு மனிதன் தவறு செய்துவிட்டு, நீதிமன்றத் தண்டனைக்குப் பிறகு திருந்தி வாழ்வதை நாங்களும் மதிக்கிறோம். ஆனால், தன் பக்கமுள்ள முன்னணித் தலைவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை வரும்போது அமைதி காப்பதும், மற்றவர்கள் மீது மட்டும் விரல் நீட்டுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத இரட்டை நிலைப் போக்காகும்-என்றார். (அ)

## போதைப்பொருள் வலையமைப்பு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் "அரசியல், போதைப்பொருள் பாதாள உலகம்" அல்லது "அரசியல், போதைப்பொருள் பாதாள உலகம்" என்றவாறான ஒரு சூத்திரமே நாட்டில் காணப்பட்டது. ஆனால், கடந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் இந்தச் சங்கிலித் தொடரை உடைத்து, போதைப் பொருள் மற்றும் பாதாள உலகத்துடன் தொடர்புடைய அரசியல் காரணிகளை தற்போதைய அரசாங்கம் முழுமையாக அகற்றியுள்ளது. இது ஒரு மிகப்பெரிய வெற்றியாகும்.

159ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு, சர்வதேச போதைப்பொருள் விநியோக வலையமைப்பின் பிரதான கடத்தல்காரர்கள் பலர் இந்தோனேசியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

36 ஆவது சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினமான இன்று, நாடு தழுவிய போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கான பிரதான "செயற்பாட்டு மத்திய நிலையம்" திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது முன்னாள் அமைச்சர் சரத் பொன்சேகாவின் உத்தியோகபூர்வ இல்லத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, முன்னாள் அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பயன்பாட்டிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அமைச்சர்களின் ஏனைய ஆறு உத்தியோகபூர்வ இல்லங்கள் மேல் நீதிமன்றங்களை நடத்துவதற்காக மாற்றியமைக்கப்பட்டு, அரசாங்கம் வழங்கிய அரசியல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன-என்றார். (அ)

## நீதித்துறையின்...

நீதித்துறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை ஆகியவை சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகக் கட்டமைப்பையும் பாதுகாப்பதற்கான தவிர்க்க முடியாத தூண்களாகும்.

எனவே, நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படுவதுடன், அது எவ்வித அழுத்தங்களுக்கும் அல்லது தலையீடுகளுக்கும் உட்பட்டிருக்கவில்லை என்பதை பொதுமக்கள் உணரும் வகையில் அதன் செயற்பாடுகள் அமைந்திருப்பது மிக முக்கியமானது என்று சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும், நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்துகிறது. (அ)

## போதைப்பொருள் ஒழிப்பு...

போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் என்பவற்றை, எமது நாட்டுக்கு எதிரான ஒரு பாரிய அச்சுறுத்தலாக நாம் அடையாளப்படுத்தியுள்ளோம். ஒரு சமூகமாக, இந்த அழிவை நோக்கி நாம் இனிமேலும் ஒரு அங்குலம் கூட நகரக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எத்தகைய சவால்கள் வந்தாலும், இந்த பயணத்தை பின்னோக்கி மாற்ற நாம் தயாரில்லை. கடந்த காலங்களில் போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போல, இது வெறும் மேடை நாடகமாக அமையாது. இந்த மண்ணையும் எதிர்கால சந்ததியினரையும் இந்த பேரழிவிலிருந்து மீட்பதற்கான யதார்த்தபூர்வமான வேலைத்திட்டத்தை நாம் தற்பொழுது முன்னெடுத்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## நெடுந்தீவு பாடசாலை...

மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, கடல் கடந்த தீவுகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அதிபர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் படகு போக்குவரத்தில் எதிர்நோக்கும் சிரமங்கள், ஆபத்துக்கள், வசதியின்மை குறித்து அவர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

இவ்வாறு சிரமங்களுக்கு மத்தியில் தங்கி நின்று பணியாற்றச் செல்லும் ஆசிரியர்களுக்கு விடுதி வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை எனவும், ஆசிரியர்களுக்கான கஷ்ட, அதிகஷ்ட பிரதேச கொடுப்பனவுகளும் வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகளால் நிறுத்தப்பட்டமை தொடர்பிலும் அவர்கள் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

உயிர்களை பணயம் வைத்து மேற்கொள்ளப்படும் பயணம் தொடர்பில் அதிபர் ஆசிரியர்களுக்கு ஏனைய அரச ஊழியர்களை போல் அபாயக் கொடுப்பனவு வழங்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநரால் தீவக பிரதேசத்தில் வைத்து வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தும் அந்தக் கொடுப்பனவு கூட அதிபர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

மேலும், கடல்கடந்த பிரதேசங்களில் உணவு பொருள்களின் விலை சற்று அதிகமாக காணப்படுகின்றபோது, மாணவர்களின் போசாக்குக்கு விசேட நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாமல் இருப்பதும் வடக்கு மாகாண கல்வி அதிகாரிகளின் அக்கறையற்ற தன்மையை வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். (அ)

## நாமலை சாடிய...

கிரிஷ் வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டியிருந்ததாலேயே பாராளுமன்ற உறுப்பினர் சபைக்கு வரவில்லை என்று கூறிய பிரதி அமைச்சர், நீதிமன்ற வழக்கு தவணைகள் வரும்போது சில தரப்பினர் பதற்றமடைவதாகவும் குறிப்பிட்டார்.

அரசாங்கம் தொடர்பாக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் மற்றும் வழங்கப்படும் அறிவுரைகள் குறித்தும் பிரதி அமைச்சர் இங்கு கருத்து வெளியிட்டார்:

"அரசாங்கத்தைப் பற்றி பல அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் அவர் வழங்குகிறார், அதற்கு நன்றி. ஆனால், அந்த அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு நாங்கள் இன்னும் தள்ளப்படவில்லை."என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

## உபதவிசாளர் பதவி...

இந்த நிலையில், குறித்த சம்பவத்தை கண்டித்தும் நீதி கோரியும், சாவகச்சேரி வர்த்தகர்கள் நேற்று முழு நாள் கடையடைப்பு செய்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், சுரேஷ் பிரேமசந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# உலக சந்தையில் விலை குறைந்ததால் எதிர்காலத்தில் எரிபொருள் நிவாரணம்!

### பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ



கொழும்பு, ஜூன். 27

உலக சந்தையில் எரிபொருள் விலைகள் குறைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும் என்று நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருளுக்காக அரசாங்கம் இதுவரை 57 பில்லியன் ரூபா மானியத்தை வழங்கியுள்ள நிலையில், இம்மாதத்துடன் அந்த மானியம் முடிவுக்கு வரவுள்ளது.

அந்த மானியத்தை மீண்டும் வழங்கலாமா என்பது குறித்த கொள்கை முடிவு எடுக்கப்பட்டு பின்னர் அறிவிக்கப்படும்.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் எரிபொருள் விலைகள் வேகமாக உயர்ந்ததன் காரணமாக, அந்த விலைகளுடன் ஒப்பிடுகையில் இங்கும் எரிபொருள் விலைகளைச் சற்று உயர்த்த வேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

அடுத்த இரண்டு மாதங்களுக்குத் தேவைப்படும் எரிபொருள் கடந்த மாதமே அதிக விலையில் கொள்முதல் கட்டளைகள் செய்யப்பட்டுள்ளன.

புதிய எரிபொருள் கொள்முதல் கட்டளைகளை மேற்கொள்ளும் போது இந்தக் குறைந்த விலைகளின் பலனைப் பொதுமக்களுக்கு வழங்க முடியும் - என்றார். (அ)

## மலேசியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட "மாட்டியா" இலங்கை வந்தவுடன் கைது!

கொழும்பு, ஜூன். 27

பாதாள உலகக் குழு உறுப்பினரான "கெஹெல்பத்தர பத்மே" என்பவரின் துப்பாக்கிதாரியாகச் செயல்பட்டதாகக் கூறப்படும் "மாட்டியா" என அழைக்கப்படும் போம்புவல தேவகே சுரங்க சஞ்சீவ கருணாரத்ன கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவில் தங்கியிருந்த அவர், அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டதையடுத்து, நேற்று முன் தினம் நள்ளிரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோதே குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் ஆரம்ப கட்ட வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதன் பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக அவர் கொழும்பு வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

42 வயதுடைய சந்தேகநபர் கொட்டுகொட, யாகொடமுல்ல பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன், அவருக்கு எதிராக சர்வதேச சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பஸ் சேவையை நவீனமயப்படுத்த திட்டம் 600 புதிய பஸ்கள் இறக்குமதி செய்ய முடிவு

கொழும்பு, ஜூன். 27

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவையை வலுப்படுத்துவதற்கும், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய வசதிகளை பயணிகளுக்கு வழங்குவதற்கும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு புதிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அதன்படி, இந்த வருட இறுதிக்குள் 600 புதிய பஸ்களை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் அதிவேக நெடுஞ்சாலை சேவைகளுக்காக 200 சொகுசுப் பஸ்களும், சாதாரண வழித்தடங்களுக்காக 400 சாதாரண பஸ்களும் உள்ளடங்கும்.

இந்த பஸ் தொகுதிகள் டிசெம்பர் மாதமளவில் நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட 104 புதிய மெட்ரோ பஸ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை ஓகஸ்ட் 15 ஆம் திகதி நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய மெட்ரோ பஸ்களில் அட்டை அடிப்படையிலான கட்டண அறவீட்டு முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான நிறுவல் மற்றும் பரிசோதனைப் பணிகளைத் தொடர்ந்து, செப்ரெம்பர் 20 ஆம் திகதி முதல் இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மின்சாரச் செலவைக் குறைப்பதற்கு புதிய முயற்சி; துறைமுகத்தை வந்தடைந்த 7 மின்கல அமைப்புகள்

கொழும்பு, ஜூன். 27

நாட்டின் மின்சார அமைப்பை நிலைப்படுத்தவும் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, மேலும் ஏழு அமைப்புகள் கொழும்புத் துறைமுகத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

அதன்படி, பாணந்துறை, பெலியத்தை, அம்பாந்தோட்டை, அம்பாறை, வவுணதீவு, வாழைச்சேனை மற்றும் மகியங்கனை ஆகிய பகுதிகளில் உள்ள மின் பரிமாற்ற துணை மின்சார நிலையங்களுக்கு அருகில் இந்த ஏழு ஆற்றல் சேமிப்பு அமைப்புகளும் நிறுவப்பட உள்ளன.

துறைமுகங்கள் மற்றும் சிவில் வான் போக்குவரத்து அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் குறித்த ஏழு அமைப்புகளும் 280 மெகாவாட் மின்சாரத்தைச் சேமிக்கும் திறன் கொண்டவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அவை தேசிய மின்சாரக் கட்டமைப்புக்கு தினமும் 70 மெகாவாட் மின்சாரத்தை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

## தொடர்ந்து ஆறாவது மாதமாகவும் வெற்றி இலக்கை அடைந்த சுங்கம்!

கொழும்பு, ஜூன். 27

இலங்கை சுங்கத் திணைக்களம் தனது மாதாந்த வருவாய் இலக்கை தொடர்ந்து ஆறாவது மாதமாகவும் வெற்றிகரமாக அடைந்துள்ளதாக உத்தியோகபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

ஜூன் மாதம் முடிவடைவதற்கு முன்பே, குறித்த மாதத்திற்கான வருவாய் இலக்கை சுங்கத் திணைக்களம் கடந்துள்ளது. ஜூன் 23ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள், 194.1 பில்லியன் ரூபாய் வருவாயை திணைக்களம் ஈட்டியுள்ளது.

2026 ஆம் ஆண்டிற்காக இலங்கை சுங்கத் திணைக்களம் 2,207 பில்லியன் ரூபாய் வருவாய் இலக்கை நிர்ணயித்துள்ளது.

வாகன இறக்குமதியில் சரிவு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பின் காரணமாக, இந்த இலக்கு கடந்த ஆண்டை விட 13.5 வீதம் குறைவாக நிர்ணயிக்கப்பட்டது.

எனினும், வருடத்தின் முதல் ஆறு மாதங்கள் முடிவதற்கு முன்பே, இந்த ஆண்டுக்கான மொத்த இலக்கில் 60.8 வீதத்தை திணைக்களம் எட்டியுள்ளது. கடுமையான சட்ட அமலாக்கம் மற்றும் மேம் படுத்தப்பட்ட மதிப்பீட்டு நடைமுறைகள்.

பொருளாதார நெருக்கடிக்குப் பிந்தைய இறக்குமதி அளவுகளில் ஏற்பட்டுள்ள மீட்சி.அந்நியச் செலாவணி கையிருப்பு நிலைப்படுத் தப்பட்டமை மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை. பொருட்களில் விலையைக் குறைத்து காட்டுதல் மற்றும் தவறான பிரகடனங்கள் மீதான கடுமையான கண்காணிப்பு ஆகியவையே இந்த முன்னேற்றத்துக்கு காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில், இலங்கை சுங்கத் திணைக்களம் 2,551 பில்லியன் ரூபாய் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வருவாயை ஈட்டியிருந்தது. தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் முன்னெடுத்து வரும் நிதி இலக்குகளை அடைவதற்கு, சுங்கத் திணைக்களத்தின் இந்த வலுவான வருவாய் செயல்பாடு பெரும் பக்கபலமாக அமைந்துள்ளது. (அ)

## கல்விளான் குளத்தில் மூழ்கி 26 வயது இளைஞர் மரணம்!

முல்லைத்தீவு, ஜூன். 27

முல்லைத்தீவு கல்விளான் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கல்விளான் குளத்தில் மூழ்கி 26 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் 3.00 மணியளவில் தூண்டில் சகிதம் மீன்பிடிக்கச் சென்ற குறித்த இளைஞர் வீடு திரும்பாத நிலையில் அவரது தந்தையார் தேடிச் சென்றுள்ளார்.

நேற்றுக் காலை கல்விளான் குளத்தில் மிதந்த நிலையில் இளைஞரின் சடலம் அடையாளம் காணப்பட்டது. உயிரிழந்தவர், கல்விளான் பகுதியைச் சேர்ந்த 26 வயதான கண்ணையா அன்பரசன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இளைஞருக்கு வலிப்பு நோய் இருந்ததாகவும், மீன்பிடிக்கச் சென்றபோது வலிப்பு ஏற்பட்டதன் காரணமாக குளத்தில் விழுந்து உயிரிழந்திருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

## வடக்கு மாகாண மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமே ஜெய்ப்பூர் நிறுவனம்!

### ஆளுநர் வேதநாயகன் பாராட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 27

அவயவங்களை இழந்த மக்களுக்கு நம்பிக்கையளித்து, அவர்கள் வழமையான வாழ்க்கையைத் தொடர உதவி செய்து வரும் யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையத்தின் சேவை மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப் பிரசாதம் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி-கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடம் மீள்திறப்பு செய்யப்பட்டதுடன், புதிய செயற் கைக் கால் தயாரிப்பு திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தியாவின் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தும் நவீன முறையை யாழ்ப்பாணத்திலேயே அறிமுகப்படுத்தி, பயனாளிகளுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனங்கள் மற்றும் லண்டன் ஸ்கூல் ஒவ் கொமர்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டிம் அண்ட் ராடி ஆகியோரின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படுகிறது.

கடந்த 40 ஆண்டுகளாக ஜெய்ப்பூர் நிறுவனம் வடக்கில் அளப்பரிய சேவையாற்றி வருவதாகத் தெரிவித்த ஆளுநர், போரினால் அவயவங்களை இழந்த மக்களுக்கு இந்நிறுவனம் பெரும் ஆதரவாக இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

இந்நிறுவனம் இல்லாதிருந்தால் பலர் வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கும் எனக் கூறிய அவர், நிறுவனத்துக்கு போதிய அரச உதவிகள் கிடைக்காத நிலையிலும் சேவையை தொடர்ந்துவருவது பாராட்டுக்குரியது எனத் தெரிவித்தார்.

விபத்துக்கள் மற்றும் நீரிழிவு போன்ற நோய்களால் இன்றும் பலர் அவயவங்களை இழக்கும் நிலையில், ஜெய்ப்பூர் நிறுவனத்தின் சேவை தொடர்ந்தும் அத்தியாவசிய மானதாக உள்ளது எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

நிறுவனத்தைப் புனரமைத்து இலவச சேவைகளை முன்னெடுக்க உதவிய அனைத்து நன்கொடையாளர்களுக்கும் நன்றி தெரிவித்த ஆளுநர், ஜெய்ப்பூர் நிறுவனம் தொடர்ந்து சிறப்பாக இயங்க வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, அரச அதிகாரிகள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media